*குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-*

*என் மனைவிக்கு சுமார் 60 வயது ஆகிறது. என் மனைவி எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். என் மனைவி குடும்பத்தை பராமரித்து வந்தார் என்றால் குடும்பத்தில் இருந்தார். என்னிடம் காட்டப்படுவது ஊத்துப்பட்டி கிராமத்தில் சுதாகர் என்பவரிடமிருந்து நான் வாங்கிய பிளாட் நம்பர்.44 க்குள்ள கிரையப்பத்திரத்தின் சார் பதிவாளர் நகல் என்றால் சரிதான்.அது எ.ம.சா.ஆ-6 ஆகும். என்னிடம் காட்டப்படும் அடமான ஆவணம் சாத்தூர் சார் பதிவாளார் அலுவலகத்தில் சென்று நான் ஸ்டேட் பாங்க்கு எழுதி கொடுத்த அடமான பத்திரம் என்றால் சரிதான். ஆனால் நான் தூத்துக்குடி ஸ்டேட் பாங்கில் ரூ.5 லட்சம் கடன் கேட்டு விண்ணப்பத்திருந்தேன். சொத்தை அடமானம் பதிவு செய்து கொடுத்தால்தான் கடன் கொடுப்போம் என்று வங்கியில் சொன்னார்கள். ஆனால் வங்கி சொன்னபடி எனக்கு கடன் தரவில்லை.காலதாமதம் செய்து கொண்டிருந்ததால் நான் வெளி நபர்களிடம் கடன் வாங்க நேரிட்டது. நான் பிறகு வங்கிக்கு சென்று நீங்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் கடனை தரவில்லை என்றும் அதனால் எனக்கு நட்டம் ஏற்பட்டு விட்டது என்றும் எனவே நான் பதிவு செய்து கொடுத்த அடமான பத்திரத்தை திரும்ப கொடுத்துவிடுங்கள் என்று சொன்னேன். அதற்கு வங்கியினர் சம்மதித்து நான் பதிவு செய்த அடமான பத்திரத்தை திருப்பி கொடுத்துவிட்டார்கள். மேற்படி விபரம் தொடர்பாக வங்கியானது நான் அடமானம் செய்து கொடுத்த அடமான பத்திரத்தை ரத்து செய்து 9வது மாதம் 2017 ரத்து செய்து சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ரசீது கொடுத்தார்கள் என்றால் சரிதான். பிறகு அதே சொத்தை நான் கடந்த 19/09/2017 அன்று என் மகனுக்கு தான செட்டில்மென்ட் ஆவணம் மூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் என் மகனுக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மென்ட் சொத்தின் மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. பொதுவாக தான செட்டில்மென்ட் சொத்தின் மதிப்பில் 4% ஐ பதிவு கட்டணமாக செலுத்த*

வேண்டுமென்றும் நான் பதிவு கட்டணமாக எவ்வளு செலுத்தினேன் என்று சொல்லமுடியுமா என்றால் அது எனக்கு தெரியாது. தான செட்டில்மென்ட் ஆவணம் என் மகனிடத்தில் உள்ளது. நான் பிளாட் 27ல் உள்ள வீட்டை தான செட்டில்மென்ட் மூலம் மணிகண்டனுக்கு எழுதி கொடுத்துள்ளதாக சொல்லியுள்ள நான் மீத சொத்தை யாருக்கு கொடுத்தேன் என்றால் என் இளையமகன் டெண்டுல்கரின் மகனான பேரன் பர்வேஸ்ராஜாவுக்கு தான செட்டில்மென்ட் மூலம் எழுதி கொடுத்துள்ளேன். அவ்வாறு தான செட்டில்மென்ட் எழுதி கொடுத்தது இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான் என்றால் சரிதான்.சொத்து என் வசம் இருப்பதால் என் மகன்களுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டது. என் மகன்களுக்கிடையே பிரச்சனை ஏற்படக்கூடாது என்பதற்காக நான் நல்ல நிலையில் இருக்கும்போதே எழுதி கொடுத்துவிட்டேன். 9வது மாதம் 2017 லிருந்து 30/05/18 வரைக்கும் நான் மாத சம்பளம் வாங்கியிருந்தேன் என்றால் சரிதான். வருடம் முழுவதும் நான் மாத சம்பளம் வாங்கி வந்தேன். நான் எவ்வளவு சம்பளம் பெற்றுள்ளேன் என்பது என் ஸ்டேட் வங்கி கணக்கில் துலங்கும் என்றால் சரிதான்.9வது மாதம் 2017 லிருந்து 30/05/18 வரைக்கும் உள்ள காலத்திற்கு நான் வாங்கிய சம்பளத்தை காட்டும் வங்கி கணக்கு புக்கை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தாக்கல் செய்தால் நான் எவ்வளவு சம்பளம் பெற்றிருப்பேன் என்று தெரிந்துவிடும்என்பதால் அதை மறைப்பதற்காக நான் வங்கி பாஸ்புக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதற்கான சூழ்நிலை எழவில்லை. பழைய காலத்திற்குண்டான பாஸ்புக் என் வசம்தான் உள்ளது அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை. நீதிமன்றம் எந்த காலத்திலற்கு கேட்கிறதோ அதை தாக்கல் செய்ய தயாரக இருக்கிறேன். என் மூத்த பையன் மணிகண்டன் வெஸ்டா காற்றாலை என்ற கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார், அது மும்பையில் அமைந்துள்ளது. ஆனால் உதவி மேலளாராக பணியாற்றி வருகிறாரா என்றால் எனக்கு தெரியாது. என் மூத்த மகன் அந்த கம்பெனியில் உதவி மேலளாராக பணியாற்றி வந்து மாதம் ரூ.45 ஆயிரம் சம்பாதித்து வருகிறார் என்றால் அவன்

வேலைக்கு சேர்ந்ததிலிருந்து என்ன வேலை செய்கிறார், சம்பளம் எவ்வளவு பெறுகிறார் என்பது எனக்கு தெரியாது. என் பையன் வேலைக்கு சேர்ந்த முதல் மாதம் எவ்வளவு சம்பளம் வாங்குகிறாய் என்று நான் கேட்டதற்கு அது உங்களுக்கு தேவையில்லை என்று என் மனைவி சொன்னாள்.அதற்கு என் மகன் சம்பளம் என் வங்கி கணக்கில் வரவு ஆகிவிடும் என்று சொன்னார். கடந்த 11/10/2018ல் என் மனைவியை என் வழக்கறிஞர் கு.வி செய்யும் போது நானும் என் மகன் மணிகண்டனும் நீதிமன்றத்திற்கு உள்ளேயே அமர்ந்து வழக்கு நடவடிக்கைகளை கவனித்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கும், என் மகனுக்கும் நல்ல உறவுமுறை உள்ளது என்றும் என் மகன் எவ்வளவு சம்பளம் வாங்குகிறான் என்பது எனக்கு தெரியும் என்றும் அதை நான் வழக்கிற்காக மறைக்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை ஏற்கனவே சுங்க லாகாவில் சிப்பாயாக பணியாற்றி வந்தபோது இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் அப்பாவின் ஓய்வு ஊதியத்தை என் அம்மா வாங்கி வந்தார் என்றால் சரிதான். என் அம்மா கடைசியா மாதம் ரூ.11 ஆயிரம் என் அப்பாவின் பென்சன் வாங்கி வந்தார் என்றால் சரிதான். ஏழாயிரம் பண்ணையில் என் அம்மாவுக்கு சொந்தமான வீடு உள்ளது என்றால் சரிதான். அதே போல் காடும் என் அம்மாவின் பெயரில் உள்ளது. ஏழாயிரம் பண்ணையில் என் அம்மா ஒரு வீட்டை கிரையம் வாங்கி அது தற்போது இடிந்து காலி இடமாக உள்ளது என்றால் சரிதான். அதேபோன்று திருதங்கலில் என் அம்மாவுக்கு சொந்தமான சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. என் மகள் ஜனனிசங்கரி என்பவர் காதல் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். என் மகள் தற்போது கல்கத்தாவில் இருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது.டெண்டுல்கர் டிப்ளமோ EEE படித்துள்ளார். அவர் தனியாக எலக்ட்ரீசியனாக வேலை பார்த்து வருகிறார். அவருக்கு மாதம் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்பது எனக்கு தெரியாது. தனியார் வேலைக்கு மாத சம்பளம் கிடையாது. அவர் மாதம் ரூ.15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பெறுகிறார் என்றால் எனக்கு தெரியாது. அதை என் மகன் டெண்டுல்கரிடம்தான் கேட்கவேண்டும். டெண்டுல்கரும் காதல் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். என் மகளும், மகனும் காதல் திருமணம்

*செய்து கொண்டதற்கு என் மனைவிதான் காரணம் என்று நான் குற்றம் சாட்டுகிறேன் என்றால் என் மகள் காதல் திருமணத்திற்கு எனக்கு தெரியாமல் துணையாக இருந்து செய்துமுடித்தார் நான் அதைபற்றி கேட்டதற்கு என்னை தகாத வார்த்தைகளால் திட்டி பல பின் விளைவுகளை சந்திக்க வேண்டும் என்று என் மனைவி சொன்னாள். என் மகளின் காதல் திருமணத்தை பற்றி என் மனைவிக்கு தெரியாது என்றும் ஆனால் நான்தான் என் மகளின் திருமணத்திற்கு என் மனைவிதான் காரணம் என்று கருதி புறக்கணித்து வருகிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு மனுதாரர் என் தாயாரை கூட்டு குடும்பமாக இருக்ககூடாது என்று எப்போதும் சொல்லவில்லை என்றும் மனுதாரர் அவருடைய சகோதரர் சகோதரிகளின் பேச்சை கேட்டு நடக்கிறார்கள் என்று நான் சொல்வதும், என்னுடைய குழந்தைகள் என்னை உதாசீனபடுத்துவதற்கு மனுதாரர்தான் காரணம் என்றும் குழந்தைகளை என் மீது வெறுப்பை ஏற்படுத்தி வருவதாக சொல்வதும், என் மூத்த மகனின் திருமணத்தின்போது மணமேடைக்கு அருகில் என்னை நிற்கக்கூடாது என்று மறுத்ததாக கூறுவதும், குழந்தைகளை ஆரம்பத்திலிருந்தே என்னை ஒட்டாமல் இருக்க செய்தார் என்றும், நான் என் வருமானம் அனைத்தையும் குடும்பத்திற்காக செலவு செய்ததாகவும் நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. 12/06/17 அன்று என் மருமகள்தான் சாப்பாடு போடாமல் மனுதாரர் வீட்டைவிட்டு விரட்டிவிட்டார் என்றும் அதற்கு நான்தான் உடந்தை என்றும் அது பற்றி மனுதாரர் என்னிடம் கேட்டபோது நான்தான் அவ்வாறு செய்ய சொன்னதாக கூறியதாகவும், இந்த சம்பவத்திற்கு பிறகும் மனுதார் என் வீட்டில் குடியிருக்க வீட்டு சாவியை கேட்டபோது அதை நான்தான் தர மறுத்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் என் மருமகள் சங்கீதாவை என் மனைவியோ, மகள் ஜனனிசங்கரியோ எந்த காலத்திலும் தாக்க வில்லை என்றும் என்னுடைய தவறுகளை மறைப்பதற்காக மேற்க்கண்ட குற்றச்சாட்டுகளை கூறிவருகிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் சர்வாதிகர போக்கோடு என்னை 36 வருடங்களாக துன்புறுத்தி வருவதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ-2ல்*

தேதி மாதம் வருடம் துலங்காது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ-2 ஆவணம் வழக்கை திசை திருப்புவதற்கும் மனுதாரரை பற்றி தவறான கண்ணோட்டத்தை நீதிமன்றத்திற்கு உருவாக்க வேண்டுமென்று நானும் என் மருமகள் சங்கீதாவும் சேர்ந்து மோசடியாக உருவாக்கிய ஆவணம் என்றால் சரியல்ல. எலும்பு முறிவு என்பதற்கும் தசை முறிவுக்கு உள்ள வேறுபாடு எனக்கு தெரியும். எனக்கு கணுக்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு சரியாகிவிட்டது. தற்போது என்னால் ஊன்றுகோல் இல்லாமல் நடக்கமுடியும். நான் இருசக்கர வாகனம் ஓட்டி வருகிறேன். எ.ம.சா.ஆ-4 ஆவணம் நீதிமன்றத்தின் கவனத்தை திசைதிருப்புவதற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.என் பிரமான வாக்குமூலத்தில் மனுதாரரை பற்றி தான்தோன்றிதனமானவர், மனம்போன போக்கில் செயல்படுபவர், சர்வாதிகார போக்குடன் 36 வருடங்களாக என்னை கஷ்டபடுத்தி வருவதாகவும் மனுதாரர் ஊதாரித்தனமாக செலவு செய்து சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ள நான் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக இருக்கிறேன் என்றால் என் வழக்கறிஞரின் அறிவுறுத்தலின்பேரில் பழைசை எல்லாம் மறந்து திருந்தி வந்தால் நான் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறேன். இதுவரைக்கும் செய்த தவறுகளை ஒத்துக்கொண்டு திருந்தி வாழுவதாக கூறும்பட்சத்தில் நான் மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறேன்.மனுதாரர் என்னிடமிருந்து தனக்கு சட்டபடி கிடைக்கவேண்டிய ஜீவனாம்ச தொகையைதான் கோரியுள்ளார் என்றால் சரியல்ல.மனுதாரர் என்னிடமிருந்து ஜீவானம்சம் கேட்டுளார் என்றால் வாழ்வதாரத்திற்கு தொகை கேட்டுள்ளார்.மனுதாரர் பெறபோகும் ஜீவனாம்ச தொகை தீர்ப்பை செயல்படுத்தவிடாமல் தடுக்கும் கெட்ட எண்ணத்துடன்தான் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை என் மகன்களின் பெயருக்கு மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல.அதனால் மேற்படி ஆவணங்கள் இந்த மனுதாரரை பொறுத்து கட்டுபடுத்தக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. மனுதாரர் என் மகள் மற்றும் தாயாரின் 15 பவுன் நகைகளை பெற்றுக்கொள்வதாக சொல்வதும் அதை விற்று ரூ3 லட்சம் தொகை கையில் வைத்திருப்பதாக சொல்வதும் உண்மையில்லை என்றால் சரியல்ல.நான் என் மனைவியை என் மருமகள் மூலம்

விரட்டிவிட்டதால் அவர் தன்னுடைய சகோதரி வீட்டில் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்றும் அவர் கோரியுள்ள இடைக்கால ஜீவனாம்சத்தை செலுத்தவேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது என்றும் அதை நான் மறுத்துவருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பெற்ற மாத சம்பளம் மற்றும் ஓய்வூதிய பலன்களை குடும்பத்திற்காகவும், கடனை அடைப்பதற்காகவும் செலவு செய்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்படி ஓய்வூதிய பலன்கள் மற்றும் வருமானங்கள் அனைத்தையும் நான் தான் மறைத்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.என் 2 மகன்களும் தன்னைத்தானே பராமரித்து கொள்ளும் அளவிற்கு வருமானம் ஈடடி வருகிறார்கள் என்றும் என் வருமானத்தை நம்பி அவர்கள் இல்லை என்றும் நான்தான் வழக்கிற்காக அவர்களுக்கு பொருளாதார ரீதியாக உதவி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் தாயாரை பொருளாதார ரீதியாக நான் பராமரிக்ககூடிய சூழ்நிலையில் அவர்கள் இல்லை என்றால் சரியல்ல. இந்த மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்ககூடாது என்ற கெட்ட எண்ணத்தில் என்னுடைய வருமானத்தை குடும்பத்திற்காக செலவு செய்துவிட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.என் செயல்பாடுகளால்தான் மனுதாரர் அவருடைய உறவினர் வீட்டில் இருக்ககூடிய சூழ்நிலை உள்ளது என்றும் அதனால்தான் வேறு வழியின்றி இந்த ஜீவனாம்ச வழக்கை என் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என் சட்டபடியான கடமையை நிறைவேற்ற மறுத்து வருவதால் நான் ஜீவனாம்சம் கொடுக்க கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல.